C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்



மன்னா..

பொழிவு : 18

AUGUST 2026

ஆகாரம் : 08

நமக்கு சமாதானத்தை உண்டு பண்ணும்

ஆக்கினை

அவர் மேல் வந்தது

அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்

ஏசாயா 53:5

UPCOMING EVENTS

All Sun Aug '26

5:00 pm

OUT REACH MINISTRY - CAMP

C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

Sunday

---

01 Aug '26

10:30am

FASTING PRAYER

Parsonage - C.S.I. Tamil Parish Alain

Saturday

---

08 22 Aug '26

7:30pm - 09:30pm

EVENING CHURCH SERVICE

C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

Saturday

---

01 15 Aug '26

7:30pm - 09:30pm

HOLY COMMUNION SERVICE

C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

Saturday

All Wed Aug '26

7:30 pm

BIBLE STUDY & PRAYER

Parsonage - C.S.I. Tamil Parish Alain

Wednesday

---

29 Aug '26

9:30 pm

BIBLE QUIZ

EZEKIEL 1-30

C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

Saturday

---

29 Aug '26

7:30pm - 09:30pm

PRAISE & WORSHIP CHURCH SERVICE

C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

Saturday

---

31 Aug '26

11:30 pm

MONTH END SERVICE

Parsonage - C.S.I. Tamil Parish Alain

Sunday



அன்பிற்கினியவர்களே,ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் நல்வாழ்த்துக்கள்.

ஆகஸ்ட் 15ஆம் தேதி 2026 ஆம் ஆண்டில் இந்தியா தனது 80 ஆவது சுதந்திர தினத்தை கொண்டாட இருக்கிறது,இந்தியர்களாக பெருமிதம் கொள்வோம். இந்திய விடுதலை வரலாற்றில் சேலம் உழவன் அப்பாவு என்பவர் இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் மதிக்கத்தக்க ஒரு மாவீரர் ஆவார். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் வரிச்சுமையை எதிர்த்து 1792 ஆம் ஆண்டில் உழவர்களை திரட்டி மிகப்பெரிய போராட்டத்தை சேலத்தில் செய்துள்ளார், பின்னர் ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்ட இவர் சேலம் செவ்வாய்ப்பேட்டை என்னும் இடத்தில் மக்கள் முன்னிலையில் தூக்கிலிடப்பட்டுள்ளார். இந்திய விடுதலைக்காக போராடிய தமிழர்களுள் இவரும் ஒருவர் ஆவார்.

அன்றைய சேலம் மாவட்டம், இன்றைய நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் இறைப்பணி செய்வதற்கு இங்கிலாந்திலிருந்து வந்த டாக்டர்.ஜெசிமன் பிராண்ட் அவர்களும் அவர்களின் துணைவியார் திருமதி.ஈவ்லின் பிராண்ட் அம்மையார் அவர்களும் கொல்லிமலையில் 9 பள்ளிகள், அனாதை விடுதிகள், மருத்துவமனை, விவசாயப் பண்ணை, பட்டுப்பூச்சி வளர்க்கும் பண்ணை, சாலை வசதிகள் மற்றும் இதைப் போன்று அநேகப் பணிகளை செய்துள்ளனர். மலைவாழ் மக்களின் விடுதலை வாழ்வுக்காக நற்செய்தியை அறிவித்து, மேற்கண்ட பல்வேறு சமூகப் பணிகளையும் செய்துள்ளனர். செம்மேடு என்ற இடத்தில் ஆலயம் ஒன்றையும் கட்டியுள்ளனர். "கொல்லிமலை கர்த்தருடைய மலை" ஆவதாக என்ற அர்ப்பணிப்புடன் திருப்பணி செய்துள்ளனர். பிரியமானவர்களே, சுதந்திர இந்தியாவின் விடுதலை பெற்ற மக்களாக, ஆன்மீக வாழ்வின் மீட்படைந்த மக்களாக நமது வாழ்வில் சேலம் அப்பாவு அவர்கள், டாக்டர்.ஜெசிமன் பிராண்ட் அவர்களின் வாழ்க்கையை முன்னிறுத்தி.இயேசு கிறிஸ்துவின் பிள்ளைகளாக வாழ்வோம்.

புறக்கணிக்கப்பட்டவர்

நாம் வாழ்வடைய, நாம் ஒன்றிணைந்து வாழ ஆண்டவர் இயேசு கிறிஸ்து நமக்காக தாம் அசட்டைப் பண்ணப் பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்—கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவராய், பாடுகள் அநுபவித்தவராய் (ஏசாயா 53:3) நம் பாவங்களை அவர் ஏற்றுக் கொண்டார் என்று ஏசாயா தீர்க்கர் தெளிவுறக் கூறுவதை நாம் படிக்கிறோம்.தமது சொந்த மக்களால் புறக்கணிக்கப்பட்ட ஆண்டவர் இயேசு,இன்று நாம் நமது உள்ளத்திலும்,இல்லத்திலும் ஏற்றுக் கொண்டு வாழ்கின்றோமா சிந்திப்போம்.

நொறுக்கப்பட்டவர்

நமது மீறுதல்களின் நிமித்தமும்,நமது அக்கிரமங்களின் நிமித்தமும் அவர் நொறுக்கப்பட்டார். நமக்காக காயப்பட்டார், நமக்கு சமாதானத்தை உண்டு பண்ணுகிற தண்டனை அவர் மீது வந்தது. அவ்வாறு காயப்பட்ட ஆண்டவர் இயேசுவின் தழும்புகளால் நாம் குணமாகிறோம் (ஏசாயா 53:5) என்பதனை உணர்ந்தவர்களாய், ஆண்டவர் இயேசுவின் காயங்களையே நோக்கிப் பார்ப்போம், அவர் பாதங்களையே இறுகப் பற்றிப் பிடிப்போம்.

நொறுக்கப்பட்டவர்

நம்மை மீட்டெடுக்க, நமக்கு விடுதலை வாழ்வைத் தந்திட, நமக்கு இரட்சிப்பு உண்டாக, அவர் நெருக்கப்பட்டார், ஒடுக்கப்பட்டார் அடிக்கப்படுகிற ஆட்டைப் போல இழுத்துச் செல்லப்பட்டார் (ஏசாயா 53:7). அவமானங்களையும், நிந்தைகளையும் ஏற்ற ஆண்டவர் இயேசு கிறிஸ்து வாய் திறவாமல் தம்மை சிலுவையில் அடிக்க ஒப்புக்கொடுத்தார்.

நிறைவாக,

இவர் பாடுபடும் தாசன்,பாவிகளின் நேசன்; நம்மை விடுதலையாக்க தம்மை அடிமையாக்கினவர். இந்தியா ஆங்கிலேயரிடம் இருந்து விடுதலைப் பெற போராடிய விடுதலை வீரர்கள் அநேகர். ஆன்மீக வாழ்வு விடுதலை அடைந்திட நம்மைத் தேடி வந்த மிஷ்னரிகள் அநேகர்.

உலகத்தினர் அனைவருக்கும் விடுதலை வாழ்வளித்து, வழி நடத்தினவர் ஆண்டவர் இயேசு கிறிஸ்து,அவரை நாம் இறுகப் பற்றிக் கொள்வோம்.குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள் (யோவான் 8:36) ஆமென்.

இறைப்பணியில்,

ஆயர்.

Rev. S.Baktha Thiyagarajan



விசுவாசப் பெண்
ரூத்

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் அனைவருக்கும் வாழ்த்துக்கள். ரூத் என்னும் பெயருக்கான பொருள் நட்பு அல்லது துணை என்பதாகும். பெயருக்கு ஏற்றபடி ரூத் தன் மாமியுடன் நட்பாக, துணையாக வாழ்ந்த விசுவாசப் பெண்ணே ரூத் ஆவார்.

இங்கே இரு துருவங்கள், இரு பருவங்கள் இணைந்து வாழ்வதை பார்க்கலாம். பெத்லகேமைச் சேர்ந்தவர் நகோமி, மோவாவைச் சேர்ந்தவர் ரூத். வயது முதிர்ந்த பருவம் நகோமி, இளமைப் பருவம் உடையவர் ரூத். அவர்கள் இருவரும் தமது கணவனை இழந்தக் கைம்பெண்கள் ஆவர். "உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம், உம்முடைய தேவன் என்னுடைய தேவன்" (ரூத் 1:16) என்று தமது உறுதியான விசுவாசத்தை வெளிப்படுத்தினவர் ரூத்.

மெய்யான அன்பு

ரூத் வாழ்விலே தன் மாமியை விடாது பற்றிக் கொண்ட (ரூத் 1:14) அன்பு நிறைந்துக் காணப்பட்டது. தொடர்ந்து மாமியார்– மருமகளின் உண்மையான அன்பின் மாதிரியையும் (ரூத் 1:16) காண முடிகிறது. வாழ்வின் முடிவுவரை உம்மோடே இருப்பேன் என்றும் (ரூத் 1:17)தனது உறுதியைத் தெரிவிக்கிறார்.

கடினமான உழைப்பு

நகோமியின் கணவர் எலிமெலேக்கின் உறவின் முறையான போவாஸ் என்பவர் நிலத்தில் வாற்கோதுமை அறுவடைக் காலத்தில் காலை முதல் மாலை வரை அரிக்கட்டுகளில் இருந்து சிந்தினதைப் பொறுக்கினாள் (ரூத் 2:7) நாள் முழுதும் தொடர்ந்து சாயங்காலம் மட்டும் வேலை செய்தார் (ரூத் 2:17). அறுவடைக் காலம் முழுமையும் அயராது உழைத்தார் (ரூத் 2:23).

நிறைவாக

பிரியமானவர்களே, விசுவாசப் பெண்ணான ரூத்தின் வாழ்வு, கர்த்தருடைய செட்டைகளின் கீழ் அடைக்கலமான வாழ்க்கை (ரூத் 2:12) ஆகும். ரூத் வாழ்வின் பலன் நிறைவான ஆசியுடன் முடிந்தது.

ஆண்டவர் இயேசுவின் பிறப்பு அட்டவணையிலும் ரூத்துக்கு (மத்தேயு 1:5) இடம் கிடைத்தது. தாவீதின் தாத்தா ஓபேத் என்பவர் போவாஸ் – ரூத் தம்பதியருக்குப் பிறந்தவர்.

சகோதரிகளாகிய நம் வாழ்க்கைச் சூழலில், மாமியார்–மருமகள் வாழ்வு முறைமை எப்படி உள்ளது. அதில் மெய்யான அன்பு, உழைப்பு, கடவுளுக்கு உகந்த வாழ்வு காணப்படுகிறதா? சிந்திப்போம், சீர்ப்பொறுந்தி வாழ்வோம். கர்த்தர் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக.

இறைப்பணியில்,
ஆயரம்மா

Mrs. P. Velanganni

செயலர் மடல்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே.. இம்மட்டும் நமக்குப் போதுமானவராக இருந்து காத்து வழிநடத்திய நம் திரியேக தேவனுக்கு மகிமையையும் கனத்தையும் செலுத்துகிறேன்.

நமது தாய்நாடாகிய இந்திய தேசத்தின் 79-ஆவது சுதந்திர தினத்தை வருகிற ஆகஸ்ட் 15-ஆம் தேதி நினைவுகூர இருக்கிறோம். இந்த நாளில், நம் தேசத்தில் உண்மையான விடுதலையும், சமாதானமும், நீதியும் நிலைநாட்டப்பட வேண்டுமென்றும், நம் நாட்டின் தலைவர்களுக்கு தேவன் ஞானத்தை அளிக்கவும், மக்கள் அனைவரும் ஒற்றுமையுடனும் அன்புடனும் வாழவும், தேவனிடம் ஒருமனதோடு ஜெபிப்போம்.

இந்தக் கோடைக்காலத்தில், ஐக்கிய அரபு அமீரக தேசத்தில் இருக்கும் நம்மையும், விடுமுறைக்காகத் தாயகம் சென்றிருப்பவர்களையும் தேவன் பாதுகாப்பாகக் காத்து வழிநடத்தி வருவதற்காக தேவனை ஸ்தோத்திரிப்போம்.

விடுமுறைக்காகத் தாயகம் சென்றிருக்கும் நமது திருச்சபை உறுப்பினர்கள் அனைவரும் பாதுகாப்பாகத் திரும்பி வந்து சேர தேவன் கிருபை செய்யும்படி அவர்களுக்காக ஜெபிப்போம்

எல்லாம் வல்ல இறைவனின் கிருபைக்கரம் உங்கள் மீது நீடித்து இருந்து, உங்களை பாதுகாத்து வழிநடத்துவதாக.

கடந்த மாதங்களில் நமது திருச்சபை குடும்பங்களில் பிறந்த குழந்தைகள்:	
30 ஜூன் 2026	திரு. செல்வ எழில் மற்றும் திருமதி மோன்சி செல்வ எழில் தம்பதியினருக்கு பெண் குழந்தை பிறந்துள்ளது.
13 ஜூலை 2026	திரு.சாமுவேல் மற்றும் திருமதி பிரின்சஸ் சாமுவேல் தம்பதியினருக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது
16 ஜூலை 2026	திரு. ஜோன்ஸ்லி கிங் மற்றும் திருமதி. மெல்பின் சுபித்ரா ஜோன்ஸ்லி தம்பதியினருக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது

இறைப் பணியில்

MR. BELFER JOHN SIGAMONI

திருச்சபைச் செயலர்

மன்னா ஜூலை-26 மீள் பார்வை



ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்கு மகிமை. ஜூலை மாத மன்னாவைக் குறித்த ஒரு மீள் பார்வை, பக்-3. ஆயர் மடலில், கர்த்தருடைய வார்த்தைக்கு செவிக்கொடுத்தலும், கீழ்ப்படிதலுமே நமக்கு உகந்தது என்றும், பக்-4ல், ஆண்டவர் இயேசுத் தொட்டவரும், இயேசுவைத் தொட்டவரும் சுகம் அடைந்தனர் என்றும், பக்-6, செயலர் மடலில் கடந்த மாத திருச்சபையின் நிகழ்வுகள் பற்றியும், பக்-7ல், இறைமக்கள் அனைவரும் விசுவாசம், ஜெபம், பொறுப்பு, குணநலன், முன்மாதிரி என வாழ வேண்டும் என்றும், பக்-8ல், நமது ஜெபங்கள் உறுதியானதாக, மறைவான இடத்தில் ஆண்டவரையே நோக்கி இருக்க வேண்டும் என்றும், பக்-9ல், மன்னிப்பு என்பது உள்ளார்ந்த மனத்துடன் இருத்தல் வேண்டும் என்றும், பக்-10ல், திருமறை வினா - விடைகள் மற்றும் விடைகள் எழுதியுள்ளோர், தொடர்ந்து சிறுபிள்ளைகளின் கை வண்ணங்கள், சிறு பிள்ளைகளுக்கான புதிர்கள் மற்றும் ARTICLE எழுதின அனைவருக்கும் பாராட்டுக்கள். கர்த்தர் தாமே ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

இறைப்பணியில்,

ஆயர்.



காலத்தைப் பிரயோஜனப்படுத்துங்கள்

அறிமுகம்

தேவன் நமக்குக் கொடுத்த மிகச்சிறந்த ஈவு . இந்த பூமிக்குரிய வாழ்க்கை மிகக் குறுகியது. நாம் வாழும் இந்த நாட்கள் பொல்லாதவைகளாகவும், உலக ஆசைகள் நிறைந்ததாகவும் இருப்பதால், நம்முடைய ஒவ்வொரு நாளையும், நிமிடத்தையும் கவனமாக நிர்வகிப்பது அவசியம்.

காலத்தை எப்படிப் பிரயோஜனப்படுத்துவது ?

ஞானமாய் நடப்பது: எபேசியர் 5:15-ல் பவுல், "ஞானமற்றவர்களைப் போல் நடவாமல், ஞானமுள்ளவர்களைப் போல் கவனமாய் நடந்து கொள்ளுங்கள்" என்று கூறுகிறார். நம்முடைய நேரத்தை வீணான காரியங்களில் செலவழிக்காமல், தேவ சித்தத்திற்கு ஏற்ப வாழ வேண்டும்.

வாய்ப்புகளைப் பயன்படுத்துதல்: நமக்கு நன்மை செய்யக் கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்த வேண்டும் (கலாத்தியர் 6:10). மற்றவர்களுக்கு உதவி செய்யவும், தேவனுடைய அன்பைப் பகிர்ந்துகொள்ளவும் கிடைக்கும் சந்தர்ப்பங்களை நழுவ விடக்கூடாது.

ஆவிக்குரிய காரியங்களுக்கு முன்னுரிமை: உலக காரியங்களில் கவனம் செலுத்துவதை விட, நித்தியத்திற்குரிய ஆவிக்குரிய விஷயங்களில் (ஜெபம், வேதாகம வாசிப்பு, தேவ ஊழியம்) நேரத்தை முதலீடு செய்ய வேண்டும்.

ஏன் நாம் காலத்தை ஞானமாய் பயன்படுத்த வேண்டும் ?

நாட்கள் பொல்லாதவை: தீய சக்திகளும், உலகத்தின் சோதனைகளும் நம்மைச் சுற்றி இருக்கின்றன. விழிப்போடு இல்லாவிட்டால், காலம் நம்மை அறியாமலேயே கடந்து போய்விடும்

நாம் விதைப்பதையே அறுப்போம்: கலாத்தியர் 6:7-9 கூறுகிறது, "ஒருவன் எதை விதைக்கிறானோ, அதையே அறுப்பான்." நன்மையான காரியங்களைச் செய்வதில் சோர்வடையாமல் இருந்தால், ஏற்ற காலத்தில் அதற்கான பலனை அடைவோம்.

சவால்

காலம் பொன் போன்றது; கடந்து போன காலம் திரும்ப வராது. நம்முடைய குடும்பம், வேலை, மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையில் தேவனுக்கு முதலிடம் கொடுத்து, ஒவ்வொரு நாளையும் அவருடைய மகிமைக்காகப் பிரயோஜனப்படுத்திக் கொள்வோம்.



Article by

MR. STEPHEN CHELLARAJ

MEN'S FELLOWSHIP



THE ARMOR OF GOD

The Armor of God is a spiritual teaching found in Ephesians 6:10–18. The Apostle Paul compares the Christian life to a soldier preparing for battle. He reminds believers that their struggle is not against people but against spiritual forces of evil. Therefore, Christians must put on the whole Armor of God to remain faithful, overcome temptation, and stand firm in their faith.

1. The Belt of Truth (Ephesians 6:14)

The belt holds the armor together, symbolizing that truth is the foundation of the Christian life. Believers should live honestly, follow God's Word, and reject false teachings. Walking in truth strengthens faith and builds trust in God.

2. The Breastplate of Righteousness (Ephesians 6:14)

The breastplate protects the heart. Spiritually, it represents living a righteous and holy life through obedience to God. Righteousness guards believers from sin and helps them maintain a close relationship with Christ.

3. The Shoes of the Gospel of Peace (Ephesians 6:15)

These shoes represent readiness to share the Gospel and live in peace with others. Christians should always be prepared to spread the message of salvation and bring hope wherever they go.

4. The Shield of Faith (Ephesians 6:16)

Faith acts as a shield against fear, doubt, temptation, and the attacks of the enemy. Trusting in God's promises gives believers strength to face challenges with confidence.

5. The Helmet of Salvation (Ephesians 6:17)

The helmet protects the head, representing the assurance of salvation. It reminds believers that they belong to Christ and gives them hope, confidence, and security in their spiritual journey.

6. The Sword of the Spirit (Ephesians 6:17)

The Sword of the Spirit is the Word of God. It is the only offensive weapon in the armor. By reading, understanding, and applying Scripture, Christians can resist temptation and defend their faith.

7. Prayer (Ephesians 6:18)

Paul concludes by encouraging believers to pray at all times. Prayer strengthens the believer, brings guidance from God, and helps maintain a close relationship with Him.

Importance of the Armor of God

- Helps believers stand firm against spiritual attacks.
- Strengthens faith and trust in God.
- Encourages holy and righteous living.
- Equips Christians to share the Gospel with confidence.
- Provides spiritual protection through God's Word and prayer.

Article by

MRS. PRINCESS SAMUEL

Women's Fellowship



பெயர் - ஏனோக்கு
பெயரின் அர்த்தம் - அற்பணித்தல்
முக்கிய வசனம் - ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருக்கையில், காணப்படாமற்போனான்; தேவன் அவனை எடுத்துக்கொண்டார்.
(ஆதியாகமம் 5:24)

அறிந்து கொள்வோம்

» ஜலபிரளயத்திற்கு முன்பு இவ்வுலகில் வாழ்ந்தவர்களில் மிகவும் குறைவான ஆண்டுகள் வாழ்ந்தவர் ஏனோக்கு.
» ஜலபிரளயத்திற்கு முன்பு இவ்வுலகில் வாழ்ந்தவர்களில் மிகவும் அதிக ஆண்டுகள் வாழ்ந்தது ஏனோக்கின் மகன் மெத்தூசலா.
» ஏனோக்கு ஆதாமில் இருந்து ஏழாவது சந்ததியாவான்.
» புதிய ஏற்பாட்டில் எபிரெயருக்கு எழுதிய நிருபத்திலும் யூதாவின் நிருபத்திலும் ஏனோக்கை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.
» ஏனோக்கு மரிக்கவில்லை. அவன் தேவனோடு இருந்தபோது அவர் அவனை எடுத்துக்கொண்டார்.

பெலன்கள்

» ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்து கொண்டிருந்தான்.
» ஏனோக்கு விசுவாசத்தில் வல்லவனாக இருந்தான்.
» அவன் தேவனுக்குப் பிரியமானவனாக இருந்தான்.
» அவன் தேவனிடம் நற்சாட்சி பெற்று இருந்தான்.
» அவன் தீர்க்கதரிசனமாக நியாய தீர்ப்பை குறித்தும், கர்த்தரின் வருகையை குறித்தும் சொல்லி இருக்கிறான்.

நாம் கற்றுக்கொள்ள வேண்டியவை

» தேவனோடு நேரம் செலவிடுவதை விரும்பவேண்டும்.
» தேவசமூகத்தில் பொறுமையாக காத்து இருக்க வேண்டும்.
» தேவனை முழு மனதோடு விசுவாசிக்க வேண்டும்.

Article by
MRS. JONISH HERCHIL
Youth Fellowship

PSALMS 31-45
சங்கீதம் 31-45

1. கர்த்தர் தமது கிருபையை விளங்கப் பண்ணின இடம் எது?
2. கர்த்தரை நம்புகிறவனை சூழ்ந்து கொள்வது எது?
3. எந்த ஜனம் பாக்கியமுள்ளது?
4. யார் மேல் குற்றஞ்சுமராது?
5. என் மடியிலே திரும்ப வந்தது எது?
6. மேகமண்டலங்கள் பரியந்தம் எட்டுவது எது?
7. யாருடைய நாவு நியாயத்தைப் பேசும்?
8. யார் எனக்கு கண்ணிகளை வைக்கிறார்கள்?
9. யாருடைய நிந்தனைக்கு என்னை ஒப்புக்கொடாதேயும்?
10. மகாசபையிலே எதைப் பிரசிங்கத்தேன்?
11. தாவீதின் மேல் தன் குதிகாலைத் தூக்கினவன் யார்?
12. கர்த்தர் தமது கிருபையைக் கட்டளையிடும் நேரம் எது?
13. தேவனைத் துதிப்பது எந்த இசைக்கருவியால்?
14. எது என் முகத்தை மூடுகிறது?
15. ராஜகுமாரத்தி உடை எப்படி இருக்கிறது?

ஜூலை-2026 மாத வினாவிற்கான விடைகள்

1. சங் 16:4
2. சங் 17:12
3. சங் 18:34
4. சங் 19:7
5. சங் 20:6
6. சங் 21:12
7. சங் 22:14
8. சங் 23:5
9. சங் 24:6
10. சங் 25:14
11. சங் 26:12
12. சங் 27:8
13. சங் 28:6
14. சங் 29:10
15. சங் 30:11

ஜூலை-2026 மாத வினாவிற்கான விடைகள் எழுதியவர்கள்

திருமதி. ஜெனிபர் பால்,

திருமதி. ஜெயின் ராஜவேல்,

திருமதி. ராதிகா செல்வக்குமார்,

திருமதி. பிப்ளின் நெல்சன்,

திருமதி. ரோஸ்மேரி,

திருமதி. ரேமலதா ஸ்டீபன்,

செல்வி. அஜின்ஷா

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 15ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

JUNE-2026 - WINNERS

KIDS COLOURING: INIYAL EVANGELINE

WORD SEARCH: INIYAN IMMANUEL


CROSS WORD: SHERINSHA,

INIYAN IMMANUEL

FIND THE WAY: INIYAN IMMANUEL

Name: _____ Date: _____

Kids Coloring



Bible: God's Creation

B U W W I P F R U I T F U L Q D R
F E M A L E T Z B O T Q W P A E F
F Y O O A D R C K I A N L A M T R
I M Y R C L I G H T R A B F T A L
J Z T R B X I E H X N D I J G E T
T H C C T N A I P T O C S T Z R R
S T H R R V B E S O J D H Y P C D
R U Y X E M E A K F N H S K M L Q
A A O N C L G V F J O U I D G O D
T F S C O S I M I W O J F E N Y C
S A W S T J N E A W M T M S D T X
J V N S N N N G I N D C R S X F U
N T Q I I S I A V F S U N E J Z Y
R J S G M J N M E V E L Z L V L A
L L H S I A G I D H X A W B S X P
D T Z A K K L N V W M N Q Z R W J
Z H N Q B Y J S B K X D M E K X X

CREATED BIRDS NIGHT LAND BEGINNING
HEAVENS EARTH STARS MOON SUN
FEMALE SKY WATER GOD ANIMALS
PLANTS LIGHT FISH MAN BLESSED

Name : .....




Maze for David and the Giant



Name : .....



Bible Crossword



DOWN

3. The one who committed the first sin
4. Isaac's son
6. Naomi's loyal daughter-in-law
7. Garden where sin began

ACROSS

1. Old Testament character who listens to God
2. He was sold by his brothers
5. Holy spot for offerings in Old Testament

AUGUST - 2026

01-AUGUST	Mr. S. Simeyon
02-AUGUST	Mrs. Blessy Grace Jonish
02-AUGUST	Mrs. Blessy Pearl
03-AUGUST	Mr. D. Rajavel
03-AUGUST	Master. Marston Isac
03-AUGUST	Baby. Kaitlin Fiona
09-AUGUST	Baby. Tisa Aavira Timotheus
10-AUGUST	Mr. Enock Prabhakaran
10-AUGUST	Mr. Aquline abish
12-AUGUST	Mr. Jeremiah Kingston
13-AUGUST	Mrs. D. Berlin Suniba
14-AUGUST	Master. Jeremiah Alan
15-AUGUST	Mr. Y. Mesiah Das
16-AUGUST	Mr. Derin Joy
19-AUGUST	Mr. Rimmon Rhenius Jeyareuben
20-AUGUST	Master. Aldan Derick
21-AUGUST	Baby. V. Olivia Sherlin
22-AUGUST	Mrs. S. Banu Priya
24-AUGUST	Ms. Crasslin Devona
25-AUGUST	Dr. Livingston Samuel
28-AUGUST	Mrs. Augusta Lawrence
28-AUGUST	Miss. Joanna Stanly

"For I know the plans I have for you," declares the Lord, "plans to prosper you and not to harm you, plans to give you hope and a future."


AUGUST - 2026

28-AUGUST	Master. Jerone Rimy
28-AUGUST	Ms. Jeslin Rexcy
29-AUGUST	Mrs. R. Preeda Nancy
30-AUGUST	Mrs. Padma Joy
31-AUGUST	Mrs. Anitha Rajan

AUGUST Wedding ANNIVERSARY

18-AUG	Mr. Derick Gasbath Joy & Mrs. John Gerald Sheeb
21-AUG	Mr. M.C. Christopher & Mrs. Beeta Christopher
23-AUG	Mr. Jason Samuel & Mrs. Patricia Santhi
26-AUG	Mr. A. Yobu & Mrs. Anna Jothi
29-AUG	Mr. B. Pushparaj & Mrs. G.S. Biji Kumari
29-AUG	Mr. P. Lifin Raj & Mrs. K.V. Ashmitha Lifin Raj
31-AUG	Mr. Suresh Babu & Mrs. K.S. Abisha

"And over all these virtues put on love, which binds them all together in perfect unity." -Colossians 3:14



EDITOR
THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE
TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348
Email: csitcalain@gmail.com
Web: csitamilparishalain.org

STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY